நாள்.19.12.2024

**அசல் வழக்கு எண். 39/2016**

பெயர் – பாலசுப்பிரமணியன்

த/பெ – ராமச்சந்திரன்

**<u>பி.வ.சா.2 – 7ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

வாதி கோவில் நலனுக்காக பொதுவாக பல வழக்குகள் தாக்கல் செய்துள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் கோவில் நிர்வாகத்தில் பரம்பரை சம்பந்தமாகவோ, இந்து அறநிலைதுறை சம்பந்தமாகவோ எனக்கு எந்த உரிமையும் கிடையாது என்றால் சரிதான். கோவில் திட்டத்தில் பரம்பரை அரங்காவலருக்கோ அல்லது அறநிலைதுறைக்கோ அன்னதானம் செய்யவேண்டும் என்று உள்ளதா என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. ஆனால் நான் அன்னதானம் செய்துவருகிறேன். நான் அன்னதானம் செய்வது என்பது என் கை பணத்தை போட்டு செய்வதில்லை என்றால் சரிதான். நான் பொதுமக்களிடம் பணம் வசுல் செய்து அன்னதானம் செய்கிறேன் என்றால் வசுல் செய்யவில்லை பொதுமக்கள் கொடுப்பார்கள் அதை வைத்து நான் அன்னதானம் செய்வேன். நான் அன்னதானத்திற்கு பணம் கேட்டு பொதுமக்களிடம் நோட்டில் அடித்து கொடுப்பேன் என்றால் இல்லை. பணம் கொடுப்பவர்களுக்கு நான் ரசீது கொடுப்பேனா என்றால் இல்லை. எவ்வளவு வசுல் மற்றும் செலவு விபரம் ஊர் மக்களுக்கு எப்படி தெரியும் என்றால் நான் ஒரு புத்தகம் அடித்து அதில் யார் யார் எவ்வளவு தொகை கொடுத்துள்ளார்கள் என்ற கணக்கு வைத்துள்ளேன். நான் அந்த புத்தகத்தை அச்சடித்து அனைவருக்கும் கொடுக்கிறேன் என்றால் இல்லை பணம் கொடுப்பவர்களுக்கு மட்டும் கொடுப்பேன். நன்கொடை கொடுப்பவர்களுக்கு என்ன கொடுப்போம் என்றால் கோவில் பிரசாதம், புக், சுவிட் கொடுப்போம். என்னிடம் காட்டப்படும் புத்தகம் தான் என்றால் ஆமாம். கோவில் பெயர் போட்டு , இறைவன் புகைப்படத்தை அச்சடிக்கப்பட்டுள்ளது என்றால் ஆமாம். அவ்வாறு புத்தகம் அச்சடித்து வசூலிக்க நான் இந்துஅறநிலைதுறையிலோ, கோவில் நிர்வாகத்திலோ அனுமதி பெற்றுள்ளோமா என்றால் இல்லை ஆனால் அவர்களை வரவழைத்துதான் அன்னதானம் தொடங்குவோம். அவ்வாறு இந்துஅறநிலைதுறைமுன்னிலையில்தான் அன்னதானம் வழங்குவோம் என்று அந்த புத்தகத்தில் உள்ளதா என்றால் இல்லை. எழுத்து மூல அனுமதி உள்ளதா என்றால் இல்லை. புத்தகத்தில் கொடுக்கப்பட்டுள்ள

தொலைபேசி எண் என்னுடையது என்றால் ஆமாம். பல பேர் சேர்த்து செய்வோம் என்று சொல்லியுள்ளேன் அவர்களது தொலைபேசி எண், பெயர்கள் இல்லை என்றால் ஆமாம். வருடம் வருடம் பல லட்சம் வசூல் செய்யபட்டு அதில் ரூ.3,4 லட்சங்கள் மிச்சம் மீரும் என்றால் ஆமாம். வருடம் வருடம் மிஞ்சும் தொகையை அறங்காவலரிடமோ, கோவில் நிர்வாகத்திடமோ கொடுக்கவில்லை என்றால் ஆமாம். அடுத்த அன்னதானத்திற்கு முன்பணமாக கொடுப்போம். நான் செய்யும் அன்னதானம் பொறுத்து கணக்கை இந்துஅறநிலைதுறையிடமோ, கோவில் நிர்வாகத்திடமோ கொடுப்போமா என்றால் ஆமாம். அந்த புத்தகத்தில்தான் வரவு செலவு கணக்கு உள்ளது. அன்னதானத்திற்கு பந்தல் உதவி கோவில் நிர்வாகம் கொடுத்தது என்று புத்தகத்தில் உள்ளது என்றால் ஆமாம். இந்துஅறநிலைதுறையும், 4ம் பிரதிவாதியும் கோவில் தொகையை பந்தல் போட கொடுப்பதற்கு ஒப்புக்கொண்டுள்ளார்கள் என்றால் சரிதான். மற்றொரு அறங்காவலரான 5ம் பிரதிவாதி கோவில் கணக்கிலிருந்து பணம் கொடுக்ககூடாது என்று ஆட்சேபணை செய்துவருகிறார் என்றால் ஆமாம். அவர் இடைக்காலமாக வந்து அவ்வாறு சொல்கிறார். 5ம் பிரதிவாதியின் தந்தை ஏற்கனவே பரம்பரை அறங்காவலராக இருந்து வந்துள்ளார் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. 5ம் பிரதிவாதி அறங்காவலர் துறையால் பரம்பரை நிர்வாதி என்று சொல்லியுள்ள விபரம் தெரியுமா என்றால் தெரியாது. 5ம் பிரதிவாதி இந்த வழக்கில் நிலுவையில் இருந்தபோது இறந்துவிட்டார் அவருக்கு பிறகு 7ம் பிரதிவாதி முரளிதரன் பரம்பரை அறங்காவலராக இருந்துவருகிறார் என்றால் தெரியாது. 7ம் பிரதிவாதி முரளிதரன் பரம்பரை அறங்காவலராக இருக்கிறார் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும். நான் லட்ச கணக்கில் வசூல் செய்து, நானே செலவு செய்கிறேன். நான் ஏன் கோவில்பணத்தில் பந்தல் போடுகிறேன் என்றால் வசூல் செய்த பணம் அன்னதானத்திற்கு போதாதது. கோவில் பெயர் போட்டோ, இறைவன் படத்தை போட்டோ பணம் வசூல் செய்வது சட்டப்படி குற்றம் என்றால் பொதுமக்களுக்காக அன்னதானத்திற்காக பணம் வசூல் செய்தோம். கோவில் பிரசாதம் என்று சொல்லி பிரசாதம் கொடுக்க எனக்கு எந்த உரிமையும் இல்லை கோவில் நிர்வாகத்திற்கு தான் உண்டு என்றால் நன்கொடை கொடுப்பதால் அதனால் பிரசாதம் கொடுக்கிறோம். அறங்காவலரிடமோ, கோவில் நிர்வாகத்திடமோ அனுமதி பெற்றோமா என்றால் அவர்களிடம் தெரிவித்துதான் எடுத்து கொடுக்கிறோம். இந்த கணக்கு புத்தகத்தை தவிற வேறு ஆதாரங்களை நான் யாரிடமும் கொடுப்பது கிடையாது என்றால் புத்தகத்தில் உள்ள கணக்கு மட்டும்தான். நான் வாங்கும் பொருட்களுக்குண்டான ரசீதுகளை யாரிடமும்

கொடுத்ததில்லை என்றால் சரிதான். இந்த கணக்கிற்கான உண்மை தன்மை என்னை தவிற வேறு யாருக்கும் தெரியாது என்றால் எங்களுக்குள் உள்ளவர்களுக்கு தெரியும். நாங்கள் எத்தனை நபர்கள் உள்ளோம் என்றால் 10 நபர்கள். என் தலைமையில் இந்த 10 பேரும் கோவில் நிர்வாகத்திற்கு போட்டியாக தனியாக செய்துவருகிறோம் என்றால் இல்லை. கோவிலில் 2000 அல்லது 3000 நபர் அமர மகா மண்டபம் உள்ளது என்றால் ஆமாம். கோவிலின் முன்பக்கம் உள்ளது. தேவைப்பட்டால் அந்த மண்டபத்தில் அன்னதானத்திற்கு பயன்படுத்திக்கொள்ளலாம், தனியாக பந்தல் போட தேவையில்லை என்றால் லட்ச கணக்கான மக்கள் வருவார்கள் அதனால் மண்டபத்தில் அன்னதானம் போடமுடியாது. நானும், 4ம் பிரதிவாதியும் இந்து அறநிலைதுறை அதிகாரிகாளும் சேர்ந்து கொண்டு கோவில் பணத்தை அங்கரிக்கப்படாத செலவுகளுக்காக பயன்படுத்திகிறோம் என்றால் இல்லை. தேவையான செலவுதான் செய்கிறோம். அந்த தேவையை தீர்மானிப்பதற்கான அதிகாரம் என்னிடம் இல்லை என்றால் பொதுசேவையாக மனிதாபிமானத்தில் செய்கிறேன். நான் செய்யும் சேவையில் பொதுசேவையும் இல்லை மனிதாபிமானமும் இல்லை கோவிலை பயன்படுத்தி துஷ்பிரயோகம் செய்கிறேன் என்றால் இல்லை. 5ம் பிரதிவாதி 1வருடத்திற்கு மட்டும் அன்னதானத்திற்கு கோவில்நிர்வாக பணத்தை செலவு செய்யகூடாது என்று வழக்கு தாக்கல் செய்த விபரம் தெரியுமா என்றால் தெரியாது. கோவில் பெயரை சொல்லி அன்னதானம் செய்வதற்கோ, வசுல் செய்வதற்கோ எனக்கு எந்த உரிமையும் கிடையாது என்றால் சட்டப்படி தெரியாது. மனிதாபிமானத்தில் செய்கிறேன். இது வரைக்கும் கோவில் பெயரை சொல்லை செலவு செய்த கோவில் மூலம் கொடுத்த பந்தலுக்குண்டான தொகையை நானும், மற்ற பிரதிவாதிகளும் சேர்ந்து கோவிலுக்கு கொடுக்கவேண்டும் என்றால் அது பொதுமக்களுக்காக செய்தது. அன்னதானம் கோவில் பெயரை சொல்லி போடகூடாது, தனிப்பட்ட முறையில் அன்னதானம் செய்துகொள்ளலாம் என்றால் வழக்கு தாக்கல் செய்தபிறகு அவ்வாறு போடுவதில்லை. எனது நிரூபண வாக்குமூலத்தில் அன்னதானம் கொடுத்ததற்கு கணக்கு வழக்குகள் கோவில் நிர்வாகத்திடம் கொடுத்துள்ளோம் என்று சொல்லியுள்ளேன். அதை ஒப்புக்கொண்டு கோவில் நிர்வாகம் ரசீது, ஒப்புகை சீட்டு கொடுத்ததா என்றால் இல்லை. கோவிலுக்காக நான் வசூலித்தேனா அல்லது அன்னதானத்திற்காக வசூலித்தேனா என்றால் அன்னதானத்திற்கு கொடுத்தவர்களிடம் இருந்து வசூலித்தேன். நான் கோவில் பெயரையும், புகைப்படத்தையும் வைத்து அன்னதானம் செய்வதால் பொதுமக்கள் கோவில் அன்னதாம் செய்வதாக நினைத்து

என்னிடம் பணம் கொடுக்கிறார் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. அசல் வழக்கில் வாதி கோரியுள்ளபடி பரிகாரம் கிடைக்ககூடியது என்றால் சரியல்ல.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

*Taken down by the typist to my dictation*
*in open Court read over to the*
*witness admitted and acknowledged*
***by him/her to be Correct.***

Sd/-S.Kavipriya,B.A.L.L.B.,

District Munsif, Pattukkottai.